I/322169/2023

**அனுப்புநர்**

மாவட்ட ஆட்சித்தலைவர் ,
தென்காசி மாவட்டம்,
தென்காசி .

**பெறுநர்,**

வருவாய் வட்டாட்சியர்
கடையநல்லூர்.

ந.க. COLR/1668/2022-A2 நாள் – 11-05-2023

அய்யா,

**பொருள்** **கருணை அடிப்படையில் பணிநியமனம்** – தென்காசி மாவட்ட வருவாய் அலகு– சங்கரன்கோவில் வட்டம் – பனையூர் கிராமம் – கிராம உதவியாளர் திரு.பா.சக்கரவர்த்தி என்பவர் 22.02.2015 அன்று பணியிடைக் காலஞ்சென்றது – அன்னாரது மகன் செல்வன்.அஜய் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டது – **பணிவரன்முறை ஆணை** வரப்பெற்றது – தொடர்பாக

**பார்வை** 1.தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந..க.அ4-1259-2019 , நாள் .07.01.2021
2.தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.அ4-1259-2019 , நாள் 29.09.2021
3. அரசாணை (3டி) எண். 40 வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை, பணி 9(2) நாள். 10.03.2023
4.வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரக கடிதம் எண். ஆ.கு.4-41911-2021 நாள். 28.04.2023
5.தொடர்புடைய ஆவணங்கள்

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், கரிவலம்வந்தநல்லூர் குறுவட்டம், பனையூர் கிராமத்தில் கிராம உதவியாளராகப் பணிபுரிந்து 22.02.2015 அன்று பணியிலிருக்கும் போது காலஞசென்ற திரு.சக்கரவர்த்தி (லேட்) என்பவரது மகன் **செல்வன். ச.அஜய்** என்பவருக்கு பார்வை 1ல் காணும் செயல்முறை ஆணையின்படி கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணிநியமனம் வழங்கப்பட்டது. பார்வை2ல் காணும் கடிதத்தின்படி பணிவரன்முறை செய்யும் வகைக்கு பிரேரணை அனுப்பிவைக்கப்பட்டது.

இந்நேர்வில், பார்வை-3ல் காணும் அரசாணையில் தனியருக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ளவாறு உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மேற்காணும் அரசாணையை இத்துடன் இணைத்தனுப்பியுள்ளேன். தனியரின்

பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொண்டு அறிக்கை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு – பார்வை–3ல் கண்ட அரசாணை

**தங்கள் நம்பிக்கையுள்ள**

**T.MUTHUMADHAVAN**

**மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,**

**தென்காசி.**

**நகல்–**

மாவட்ட வழங்கல் அலுவலர், தென்காசி

சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தென்காசி மாவட்ட வருவாய் அலகு – திரு.ச.அஜய், த/பெ. காலஞ்சென்ற திரு.பா.சக்கரவர்த்தி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

பணிகள் அலகு, பணி-9(2) பிரிவு

அரசாணை (3டி) எண்.40

நாள் 10.03.2023.
சுபகிருது வருடம், மாசி-26,
திருவள்ளுவராண்டு 2054.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். ஆகு4/41911/2021, நாள் 14.10.2022.

******

ஆணை:-

தென்காசி மாவட்ட வருவாய் அலகில், கிராம உதவியாளராகப் பணியாற்றி பணியிடையே 22.02.2015 அன்று காலமான திரு.பா.சக்கரவர்த்தி என்பவரின் மனைவி திருமதி.அழகுதுரைச்சி என்பவர் தனது மகன் திரு.ச.அஜய் என்பவருக்கு கருணை அடிப்படையில், பணிநியமனம் கோரி குறிப்பிட்ட காலவரம்பிற்குள் விண்ணப்பம் அளித்திருந்தார். கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால், தென்காசி மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டு, தனியர் 08.01.2021 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாகவும், திரு.ச.அஜய் என்பவரை தென்காசி மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் 08.01.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வேண்டி தென்காசி மாவட்ட ஆட்சியர், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையருக்கு முன்மொழிவு அனுப்பியிருந்தார்.

//த.பி.பா//

2. தென்காசி மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவினை கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் ஏற்று, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

3. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரையை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலனை செய்த பின்னர், தென்காசி மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகப் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.ச.அஜய் என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 08.01.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வு, ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றை பெறத் தனியர் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.1328/க்யூ2/2023-1, நாள் 24.02.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.4209127/ஜி2/2023-1, நாள் 03.03.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-5.
மாவட்ட ஆட்சியர், தென்காசி மாவட்டம்.
திரு.ச.அஜய், இளநிலை உதவியாளர்
(தென்காசி மாவட்ட ஆட்சியரின் மூலமாக)

நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.